1986 மே 13]

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திருமதி விஜயலஷ்மி பழனிச்சாமி : துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட மூன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட மூன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஒ) இனாம் எடுத்து விடுதல் தொடர்பான (நடவடிக்கைகளை) செல்திறனாக்குதல்) சட்டமுன்வடிவு 1986.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு இனாம் எடுத்துவிடுதல் தொடர்பான (நடவடிக்கைகளை செல்திறனாக்குதல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 23/1986)** ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

இனாம் எடுத்துவிடுதல் தொடர்பான சட்டங்களின்கீழ் நடுவர் மன்றமாக செயல்பட திருச்சிராப்பள்ளி ஐந்தாவது கூடுதல் துணை நீதிபதியினுடைய நடவடிக்கைகளை செல்திறனாக்குவதற்காக சட்ட முன்வடிவு கொண்டு வரப்பட்டிருக்கிறது. திருச்சிராப்பள்ளி கூடுதல் உதவி நீதிபதி 14–12–1976 முதல் 16–2–1977 வரையில் தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு எஸ்டேட்டுகள் ஒழித்தல் மற்றும் ரயத்துவாரியாக மாற்றுதல் சட்டம், (தமிழ்நாடு சட்டம் 26/1963 தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு சிறிய இனாம்கள் ஒழித்தல் மற்றும் ரயத்துவாரியாக மாற்றுதல் சட்டம், (தமிழ்நாடு சட்டம் 30/1963) தமிழ்நாடு 1963 இனாம்கள் துணைச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 31/1963) ஆகியவற்றின் விதித்துறைகளின்கீழ் வழக்குகளை விசாரித்து முடிவு செய்வதை செல்திறனாக்க வகை செய்யும் சட்டம் பேரவைக்கு அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் ஆணையை எதிர்நோக்கி இனாம் ஒழிப்புச் சட்டங்களில் அதாவது தமிழ்நாடு சட்டங்கள் 26/1963, 30/1963, 31/1963-ன் கீழ் வழக்குகளை விசாரித்து முடிவு செய்யுமாறு திருச்சிராப்பள்ளி மாவட்ட நீதிபதி ஐந்தாவது கூடுதல் துணை நீதிபதிக்கு 3–12–1976 நாளன்று உத்தரவிட்டதன் பேரில் திருச்சிராப்பள்ளி ஐந்தாவது உதவி கூடுதல் நீதிபதி 14–12–1976 முதல் 16–2–1977 வரையிலான கால

**1986 ஆம் ஆண்டு சனவரி 29–ஆம் தேதியிடப்பட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

அளவிற்குள் மேற்படி சட்டங்களில் 94 வழக்குகளை விசாரித்து தீர்ப்பளித்துள்ளார். இவ்வாறு இனாம் ஒழிப்புச் சட்டங்களின் கீழ் வழக்குகளை விசாரித்து முடிவு செய்வது தொடர்பாக வணிக வரித்துறை, அறநிலையத் துறைக்கு 17-2-1977 நாளிட்ட 241 ஆம் எண். அரசாணையில் அரசு திருச்சி கூடுதல் நீதிபதிக்கு அதிகாரம் வழங்கியது. தீர்ப்பாயங்களின் முடிவு முன்தேதியிலிருந்து அமைக்க மேற்படி சட்டங்களில் அரசுக்கு அதிகாரம் இல்லையாதலால், திருச்சி ஐந்தாவது கூடுதல் உதவி நீதிபதி 14-12-1976 முதல் 16-2-1977 வரையிலான கால அளவிற்குள் இனாம் வழக்குகளை விசாரித்து முடிவு செய்தவைகளை சட்டத்தின் மூலமாக செல்திறன் ஆக்குவதற்காக நடவடிக்கை எடுக்குமாறு உயர்நீதி மன்றப் பதிவாளர் அரசைக் கேட்டுக் கொண்டு இருக்கிறார். ஏற்கெனவே அரசினுடைய ஆணையின் மூலமாக வழக்குகளை விரைவாக தீர்க்கவேண்டும் என்பதற்காக 94 வழக்குகளை விசாரிப்பதற்காக திருச்சிராப்பள்ளி ஐந்தாவது கூடுதல் நீதிபதி கேட்டுக்கொள்ளப்பட்டார். அதனால் தீர்ப்பு வழங்கினார். ஆனால், அரசுக்கு இந்த அதிகாரம் இல்லை என்றும், சட்டமன்றம் தான் இந்தச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்றும், அப்படி நிறைவேற்றினால்தான் அந்த நீதிபதியினுடைய நடவடிக்கை செல்திறனாகும் என்றும் உயர்நீதிமன்றம் சொல்லியிருப்பதன் காரணமாக, அதைச் செல்திறனாக்குவதற்காகத் தான், இந்தச் சட்ட முன்வடிவு இங்கே கொண்டு வரப்பட்டு இருக்கிறது. இதற்கு முன்னால், வருவாய் வாரியமும் இசைவு அளித்து உள்ளது. இதன் தொடர்பாக சட்டத்துறையோடு கலந்து ஆலோசித்து, சென்னை உயர்நீதிமன்றப் பதிவாளர் தெரிவித்தவாறு, சட்டம் ஒன்றை இயற்றி அரசு நடவடிக்கை எடுத்து ஒரு சட்ட முன்வடிவைத் தயாரித்து, அதற்கு மத்திய அரசினுடைய ஒப்புதலும் பெறப்பட்டு உள்ளது. எனவே, இந்தச் சட்டமுன்வடிவு முதற்கண் 1983 ஆவது ஆண்டே கொண்டு வரப்பட்டு, பல்வேறு காரணங்களினால், ஒத்திவைக்கப்பட்டு, இன்று கொண்டுவரப்படுகிறது. ஆகவே, ஏற்கெனவே தீர்ப்பு அளிக்கப்பட்டு விட்டதன் காரணமாக, இந்தச் சட்டமன்றம், தராவிட்டால், அது செல்திறன் ஆகாது. அதைச் செல்திறன் ஆக்குவதற்காகத்தான் இங்கே அது எளிதாக அமைய வேண்டும் என்பதற்காகத்தான் கொண்டுவரப்பட்டு இருக்கிறது. இந்த அவை ஏற்றுக்கொண்டு நிறைவேற்றித் தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்தச் சட்டமுன்வடிவை இங்கே சமர்ப்பித்துப் பேசும்போது குறிப்பிட்டார்கள். குறிப்பாக இனாம் சட்டத்தினுடைய 26/63, 30/63, 31/63 இந்த மூன்று சட்டங்களின் கீழ் 94 வழக்குகள்

விசாரிக்கப்பட்டு தீர்ப்பு அளிக்கப்பட்டு இருக்கக்கூடிய அந்த தீர்ப்பு செயலாக்கம் பெறுவதற்கு அந்தத் தீர்ப்பை நடைமுறைப்படுத்துவதற்கு இப்படி ஒரு சட்டத்தை நிறைவேற்றுவதன் மூலமாகத் தான் சாத்தியம், எனவே இந்தச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்றும் சொல்லி இங்கே, முன் மொழிந்து இருக்கிறார்கள். நான் குறிப்பிட விரும்புவது, குறிப்பாக புதுக் கோட்டை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், இந்த இனாம் கிராமங்கள் என்பது, அந்தச் சட்டங்களின் கீழ் எடுக்கப்பட்டு மைனர் இனாம்கள், அதற்குப் பிறகும், விடுபட்ட மைனர் கிராமங்கள் என்றும் இருந்து, 88 கிராமங்களை அதற்குப் பிறகு எடுத்து, அது தீர்க்கப்பட்டு இருக்கிறது. ஆனால் இதிலே இப் போது ஏற்பட்டு இருக்கக்கூடிய பிரச்சினை என்பது அரசைப் பொறுத்தவரையில், இந்த இனாம் ஒழிப்பு முடிந்துவிட்டதாகச் சொல்கிறார்கள். செட்டில்மென்ட் ஆபீசர்களும் அந்த செட்டில்மென்ட் முடிந்துவிட்டது என்று சொல்கிறார்கள். இந்த இனாம் ஒழிப்பு வரும்போது, அதிலே பரம்பரையாக உழுது கொண்டு இருந்த அந்த விவசாயிகளை ரயத்தாக மாற்றி, அவர்களுக்குப் பட்டா கொடுப்பதற்குப்பதிலாக, பழைய இனாம் தாரர்களை ரயத்தாக மாற்றி, பட்டா அவர்களுக்கு கொடுக்கப் பட்டு, பழைய இனாம்தாரர்கள் நிலச்சுவான்தாரர்களாக மாற்றப்பட்டு இருக்கிறார்களே தவிர, அதிலே உழைத்துக்கொண்டு இருக்கிற விவசாயிகள், பரம்பரையாக இருக்கக்கூடிய விவசாயிகள், அந்த நிலத்தினுடைய சொந்தக்காரர்களாக மாற்றப்பட வில்லை. இப்படி ஏராளமான பிரச்சினைகள் அந்த மாவட்டம் முழுவதும் இருக்கிறது. எனவே இந்த இனாம் ஒழிப்புச்சட்டத்தை முழு செயல்திறனோடு அமல்படுத்தி, அங்கே இருக்கக்கூடிய முழு விவசாயிகளுக்குள், பரம்பரையாக விவசாயம் செய்து வருகின்ற அந்த விவசாயிகளை அந்த நிலத்தினுடைய உரிமையைப் பெற்று, அவர்கள் அந்த நிலத்தினுடைய ரயத்தாக மாற்றக்கூடிய முறையில், இந்த இனாம் சட்டங்கள் முழுவதும் திருத்தப்பட்டு அமல் நடத்தக்கூடிய முறையிலே, இந்த இனாம் ஒழிப்புச் சட்டம் என்பது நிறைவேற்றப்படக்கூடிய முறையில், அது அமல் நடத்தப் படவேண்டும். அப்படிச் செய்வதன் மூலமாகத்தான் அந்த விவசாயிகளுக்கு பயன் அளிக்கக்கூடியதாக இருக்குமே தவிர, இந்தப்பழைய இனாம்தாரர்களை ரயத்தாக மாற்றி, நிலச்சுவான் தாரர்களாக மாற்றுவது என்பது பொருத்தமல்ல. அது அந்த விவசாயிகளுக்கு உதவி செய்யக்கூடியதாக இருக்காது. அந்த முறையிலே, முழு செயல்திறனோடு அந்த விவசாயிகளுக்கு பட்டா கொடுக்கக்கூடிய முறையிலே இந்தச் சட்டம் திருத்தப்பட வேண்டும். அந்த வகையில் இந்த அவைக்கு முன்னால் நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்து, அந்த முறையில், முழுத் திருத்தங்களோடு இந்த இனாம் சட்டம் திருத்தப்பட்டு, அங்கே உழுதுகொண்டு இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு அதை ரயத்தாக மாற்றிக்கொடுக்கக்கூடிய வகையில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கூறி அந்தத் திருத்தத்தை இந்த அவையிலே கொண்டு

வருவதற்கான முறையிலே அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டு, என்னுடைய உரையை முடிக்கிறேன்.

முற்பகல் 11.10

திரு. ஏ. எஸ். ரவீந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திருத்தத்தை வரவேற்கின்ற அதே நேரத்தில் சில கருத்துக்களைக் கூறாமல் இருக்க முடியவில்லை. இந்தத் திருத்தத்தின் முக்கியமான நோக்கம் 14—12—1976 முதல் 16—2—1977 வரை ஐந்தாவது துணை சார்பு நீதிபதி, திருச்சிராப்பள்ளி, அவர்கள் போட்ட உத்தரவினை செல்திறன் உள்ளதாக ஆக்குவது. நான் சொல்ல விரும்புவது எல்லாம்—இந்த அரசாலே காரியங்கள் தாமதமாக நடைபெறுகின்றன. நிலை ஸ்தம்பித்துவிட்டது என்று எல்லாம் குற்றச்சாட்டுகள் கூறப்படுகின்ற இந்த நேரத்தில், இந்தத் திருத்தத்தை இவ்வளவு காலம் கடந்து கொண்டுவருவது முறையானதுதானா என்று அறிய விரும்புகிறேன். ஏனென்றால், சென்னை உயர்நீதி மன்றம் 3—12—1976-லே திருச்சி மாவட்ட நீதிபதி அவர்கள் போட்ட உத்திரவினை அரசின் கவனத்திற்கு 1978ஆம் ஆண்டு 11ஆம் மாதமே கொண்டு வந்திருக்கிறது. ஆனால் அதற்குப்பிறகு 1977 ஆம் ஆண்டு ஒரு அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்நிலையிலே ஏறத்தாழ 10 ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு நீதிபதி பிறப்பித்த உத்தரவு செல்லுபடியாகுமா, செல்லுபடியாகாதா என்ற பிரச்சனைக்கு முடிவுகட்டுவதற்காக 86-லே இந்தத் திருத்தம் கொண்டு வரப்படுகிறது. இந்த இடைப்பட்ட 10 ஆண்டு காலத்திலே இந்த வழக்குகளில் போடப்பட்ட தீர்ப்புகளுடைய முடிவு ஸ்திரமற்ற தன்மையிலே ஊசலாடிக்கொண்டு இருந்துகொண்டிருக்கிறது. இந்தக் காலகட்டத்திலே ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்களுக்கு யார் பொறுப்பு என்பதைத்தான் நான் அறிய விரும்புகிறேன். ஏனென்றால், ஒருக்கால், இந்த நீதிபதி விசாரிக்கும் போது யாரேனும் ஒருவர் இந்த நீதிபதிக்கு இந்த வழக்கை விசாரிப்பதற்கு உரிமையில்லை, அருகதையில்லை. சட்டபூர்வமான அந்தஸ்து இல்லை என்று போராடி அந்த அடிப்படையில் ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தால் 10 ஆண்டுகளுக்குப் பிறகு அந்தத் தீர்ப்பால் பாதிக்கப்படுபவர்களின் நிலைமை என்ன என்பதை யோசிக்கவேண்டும். இந்த நிலையிலே இந்த வழக்கை நடத்துவதற்கு செலவிடப்பட்ட தொகையும் இருக்கிறது. இந்த வழக்கின் முடிவால் மனம் நொந்து சிலபேர் தவறான முடிவுகளைக்கூட மேற்கொண்டு இருக்கலாம். அவர்களுடைய குடும்பத்துக்கு பெரும்பாலான பாதிப்புகள் ஏற்பட்டிருக்கலாம். எனவே தயவுசெய்து திருத்தங்களை உடனுக்குடன் கொண்டுவருவது அரசுக்கு மட்டும் அல்ல மக்களுக்கும் நன்மையாக இருக்கும். 10 ஆண்டுகளுக்கு முன்பு செய்யப்பட்ட ஒரு செயலுக்கு, 10 ஆண்டுகளுக்குக் பின்பு அரசு அங்கீகாரம் வழங்குவது என்பது மிகமிக் கேவலமானது. எனவே தயவுசெய்து அமைச்சர் அவர்கள்

வருங்காலத்திலேயாவது இத்தகைய அநாவசியமான காலதாமதம் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1983-லேயே இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டு நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இப்போது அதற்குப் பிறகு 3 ஆண்டு ஆகியிருக்கிறது. எனவே தயவுசெய்து மற்ற எதில் காலதாமதம் ஏற்பட்டாலும் பரவாயில்லை; இத்தகைய வழக்குகளில் மானப் பிரச்சனை, உயிர்ப் பிரச்சனை போன்ற பிரச்சனைகள் இருக்கின்றன. தயவுசெய்து அரசு இதில் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டும். கால தாமதத்தைத் தவிர்க்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இடம் சாருகிறேன். வணக்கம்.

டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்ற சட்ட முன்வடிவினுடைய முக்கியமான நோக்கம், இங்கே முதலிலேயே எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. 1976-க்கும் 77-க்கும் இடையில் 96 வழக்குகள் மீது அளிக்கப்பட்ட தீர்ப்பை செயல்திறனாக ஆக்குவதுதான். ஆகவே அதில் சட்ட சிக்கல்கள் ஏற்பட்டு, இந்தத்துறை ஆராய்ந்து, பிறகு சட்டத்துறையும் ஆராய்ந்து, உயர்நீதி மன்றமும் ஆராய்ந்து, மத்திய அரசினுடைய அனுமதியும் பெற்று இந்தக் கடிதப் போக்குவரத்துக்களெல்லாம் இருந்ததன் காரணமாக சிறிது காலதாமதம் ஏற்பட்டுவிட்டது. 1983 ஆவது ஆண்டிலே இந்த அவையிலே அதை அறிமுகப்படுத்தியதற்குப்பிறகும், அப்பொழுதே நிறைவேற்றி இருக்கலாம். ஆனால் அலுவல் ஆய்வுக் குழுவில் இப்படிப்பட்ட சட்டங்கள் வருகின்றபோது கடைசிநேரத்திலே விரைவாக சட்டமன்றத்தை முடிக்கவேண்டுமென்று கோரிக்கைகள் வரும்போது சிலபல சட்டங்களை, அடுத்த தடவை பார்த்துக்கொள்ளலாம்; அடுத்த தடவை பார்த்துக்கொள்ளலாம் என்று தள்ளிப் போடப்பட்டு தள்ளிப்போடப்பட்டுபுறக்கணிக்கப்படுகின்றசட்டங்களிலே இதுவும் ஒன்றாக ஆக்கப்பட்டு இருந்ததன் காரணமாக 83 ஆவது ஆண்டும் தள்ளப்பட்டு, 84 ஆவது ஆண்டும் தள்ளப்பட்டு, 85 ஆவது ஆண்டும் தள்ளப்பட்டு, நல்லவேளையாக இப்போது 1986ஆம் ஆண்டு வந்து சேர்ந்திருக்கிறது. அதுதான் இந்தக் காலதாமதத்துக்கு காரணமே தவிர காலத்தாழ்வு ஏற்படுத்தவேண்டும் என்று அல்ல. அதனுடைய முக்கியமான நோக்கம், எளிமையான ஒன்றுதான். ஆக அந்த வழக்குகளை செயல்திறனாக ஆக்கவேண்டுமென்று உயர்நீதி மன்றம் சொன்னதை சட்டத்துறையும் ஒப்புக்கொண்டிருக்கிறது. மத்திய அரசினுடைய அனுமதியைப்பெற்று அதைச் சட்டவடிவிலே கொண்டுவருவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டு இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் வீரய்யன் அவர்கள் இனாம் ஒழிப்புச் சட்டத்தில் இருக்கின்ற சிலபல குறைபாடுகளைச் சுட்டிக்காட்டினார்கள். அந்தக் குறைபாடுகளைத் தனியாக கவனித்து

தான், அதன்பேரிலே தனியாக திருத்தங்கள் கொண்டுவர வேண்டும். இன்று கொண்டு வந்த ஒரு திருத்தத்தோடு அதை இணைக்க இயலாது. அதைத் தனியாக கொண்டுவரலாம். தனியாக ஆலோசிக்கலாம் என்று எடுத்துச் சொல்லி இதை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

''தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு இனாம் எடுத்து விடுதல் தொடர்பான (நடவடிக்கைகளை செல்திறனாக்குதல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/1986) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2, 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு இனாம் எடுத்துவிடுதல் தொடர்பான (நடவடிக்கைகளை செல்திறனாக்குதல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/1986) நிறைவேற்றப்பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஓ) நில அளவை எல்லைகள் (திருத்த) சட்டமுன்வடிவு 1986.

மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு நில அளவை எல்லைகள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்